Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 15-12-2025
Deposition of witness for : PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகாலட்சுமி | வயது | : | 65 |
| கணவர் பெயர் | : | லோகநாதன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | மாதாகோட்டை | தொழில் | : | வீட்டுகுடித்தனம். |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

**Counsel Present**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2) இறந்துபோன திருவேங்கடம் என் மகன். ஆஜர் எதிரியும் என் மகன் ஆவார்.

3) கடந்த 5 மாதங்களுக்கு முன்பு திருவேங்கடம் இறந்துபோனார். நான் மாதாக்கோட்டையில் இருந்தேன். திருவேங்கடம் கணபதி நகரில் உள்ள வீட்டில் இறந்துபோனார்.

4)போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரித்த போது 6.7.2025 ம் தேதி இரவு 8 மணிக்கு நானும் எனது கடைசி மகனும் பூர்விக வீட்டிற்கு காரில் சென்று பார்த்தபோது எங்களுக்கு தெரிந்த கார்த்திக் மற்றும் ஜெயகுமார் இருவரும் எங்கள் வீட்டில் பதட்டத்துடன் வெளியே வந்தார்கள் என்றும் எங்களை பார்த்ததும் மதியம் உங்களது மகன் அறிவழகன் அய்யோ என் தம்பி திருவேங்கடத்தை நானே அடிச்சு கொன்னுட்டேன்னு சத்தம் போட்டுக்கிட்டே வீட்டில் இருந்து வெளியே ஓடியதாக சொன்னார்கள் என்றும்,

2) நாங்கள் உடனே வீட்டில் உள்ளே சென்று பார்த்தபோது எனது மகன் திருவேங்கடம் பேச்சு மூச்சு இல்லாமல் ரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும் நாங்கள் சத்தம்போது அக்கம்

பக்கம் உள்வர்கள் வந்து 108 ஆம்புலன்சில் என் மகனை கொண்டு சென்று தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமணைக்கு கொண்டுபோனபோது அங்கு பரிசோதித்துவிட்டு திருவேங்கடம் இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்று சொல்லி விட்டு தற்போதுஎதிரி என் மகன் என்பதால் அவரை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்